www.tamilarangam.net

அன்பளிப்பு ரூ. 1

# உறுமல்

நாள்: 01-10-1986 தமிழீழச் செய்திகள் வெளியீடு: 08

# மாகாணசபைமூலம் பிரச்னை தீராது

# ஆயுதங்களைக் கீழே போடாதீர்!

## போராளிகளுக்கு

# சிங்களக் கட்சி வலியுறுத்தல்!!

"மாகாணசபை மூலம் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடாது. தமிழ் மக்கள் பாதுகாப்புப் பற்றியோ, அவர்களின் பாரம்பரிய பிரதேசம் பற்றியோ, அதில் எதுவுமில்லை. தமிழ்ப்போராளிகளை நிராயுதபாணிகளாக்குவதற்கே ஜனாதிபதி ஜெயவர்த்தனா இத் திட்டத்தை மேற்கொண்டுள்ளார். எனவே தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடக்கூடாது" என்று நவ லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற மாகாண சபைகள் பற்றிய யோசனைகள் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய நவலங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார "தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் கவனத்திலெடுக்கும் போது அவர்கள் தனிநாடு கோருவது ஒரு புதுமையான விடயமல்ல. சிங்களப் பத்திரிகைகள் தமிழர்களின் பிரச்சினைகளைப்பற்றி உண்மையான தகவல்களைத் தராததோடு வரலாற்று உண்மைகளையும் மறைக்கின்றன. அதனால் சிங்கள மக்கள் உண்மை நிலையை அறிய முடியாதிருக்கிருக்கின்றனர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் செய்தி வெளியீட்டுப் பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்களோடு புலிகள்

## மின் திருட்டு புலிகளால் தடுப்பு

யாழ்ப்பாணம் மாவட்டம் உரும்பராய் உப அபிவிருத்தி அலுவலக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பல தடவைகளாக விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளையும் மீறி திருட்டுத்தனமாக மின்சாரத்தை உபயோகித்து வந்த மின்பாவனையாளர்களின் மின் இணைப்புகளை தமிழீழ விடுதலைப்புலிகள் துண்டித்தனர். அத்துடன் சட்டவிரோத மின் பாவனைக்காகப் பயன்படுத்திய வயர்களும் விடுதலைப்புலிகளால் பறிமுதல் செய்து அழிக்கப்பட்டன.



## சிறுவர்கள் பராமரிப்பில் அனைத்து பொது அமைப்புகளும் முழுமூச்சாக ஈடுபடவேண்டும்!

—விடுதலைப்புலிகள் அறிக்கை

தமிழீழத்தில் உள்ள அனைத்துப் பொது ஸ்தாபனங்களும், சிறுவர் பராமரிப்பில் முழுமூச்சாக ஈடுபடவேண்டும் என்று புலி மாமா என்ற பெயரில் ''எம் உயிரினும் இனிய தமிழீழ மழலைகளுக்காக''

என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின் முக்கிய பகுதிகள் :—

ஒவ்வொரு நாட்டுப் போராட்டக்காலகட்டத்திலும் உளவியல் ரீதியாகச் சிறுவர் மனநிலை மிகக் கடுமையாகப் பாதிப்படைகிறது. ஒரு நாட்டின் வருங்கால வாரிசுகளுக்கு ஏற்படும் பாதிப்பு அந்நாட்டின் எதிர்காலத்தையே இருளடையச் செய்கிறது.

எதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத வயதிலுள்ள கள்ளங் கபடமற்ற குழந்தை உள்ளங்களில் தினசரியான துப்பாக்கி வேட்டுகளும், குண்டுச் சத்தங்களும், இம்மண்ணில் சிந்தப்படுகிற இரத்தங்களும், துன்ப துயரங்களும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில் இவற்றை ஜீரணிக்க முடியாமல் சின்னஞ் சிறிசுகளின் மனநிலை பெரிதும் பாதிப்படைகிறது. சிறுவயதில் மனநிலையில் ஏற்படும் கடுமையான பாதிப்பு, மனதில் ஏற்படும் விகாரம் என்பன மனித நாகரிகமற்ற சந்ததி ஒன்றின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும்.

எனவே இன்றைய சூழ்நிலையில் நாம் குழந்தைகளின் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளோம். எம்நாட்டின் வருங்கால வாரிசுகளின் ஒழுங்கமைவான வளர்ச்சியிலேயே எம் எதிர்காலம் தங்கியுள்ளது. இந்த வகையில் இன்றைய போர் சூழலின் கடுமையான தாக்கங்களில் இருந்து எம் மழலைகளின் மனநிலை பாதிப்படையாமல் பேணுவதன் ஓர் அங்கமாகவே எம்மால் உருவாக்கப்பட்ட பண்டிதர் பெயரில் அமைந்த ''சரணாலயம்'' செயற்படுகிறது. இதுபோன்று அனைத்துப் பொது ஸ்தாபனங்களும் சிறுவர் பராமரிப்பில் கவனமெடுத்து முழு மூச்சாக ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

## கட்டுப்பாட்டு விலையில் எரிபொருட்கள், விடுதலைப்புலிகள் அறிவுறுத்தல்! கொள்ளைலாபமடிப்போருக்கும் எச்சரிக்கை !!

எரிபொருள் விற்பனையை ஒரு கட்டுப்பாட்டு விலையின் கீழ் செய்யப்பட வேண்டும் என்று சகல எரிபொருள் விற்பனையாளர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'தனியார் சுய விருப்பத்தின்படி கொள்ளை லாப நோக்கோடு நாளுக்கு நாள் எரிபொருள் விலையில் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. சமுதாய ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த ஒழுங்கீனத்தைக் கட்டுப்படுத்துமுகமாகவும், எம்மக்களின் நலன்களை முதன்மைப் படுத்துமுகமாகவும் அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்றான எரிபொருளை இன்று முதல் ஒரு நியாயமான கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்தல் வேண்டும் எனச் சகல எரிபொருள் விற்பனையாளர்களுக்கும் அறிவுறுத்துகிறோம்:''

(தொடர்ச்சி 11 ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர்முனையில் புலிகள்

## 21-8-86

யாழ் மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேவந்த இராணுவத்தினர் மீது எமது வீரர்கள் அதிரடித்தாக்குதல் நடாத்தினார்கள். இதன்போது 3 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பலர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். எமது வீரர்களது கடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாத இராணுவத்தினர் முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடுரோட் சந்தியில், அவ்வழியால் வரும் பொதுமக்களை கொல்லும் நோக்குடன் இராணுவத்தினர் மறைவில் படுத்திருந்தார்கள். இதையறிந்த எமது வீரர்கள் அங்கே விரைந்து சென்று இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல் நடாத்தினார்கள். தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் போது இராணுவத்தினருக்கு உதவியாக மற்றுமொரு படைப்பிரிவு ஒன்றும் அவ்விடத்திற்கு விரைந்து வந்தது. இவர்கள் வந்த கவச வாகனத்தை எமது வீரர்கள் R. P. G. (Rocket Proyelled Grenade) கொண்டு தாக்கினார்கள். இதனால் அந்தக் கவச வாகனம் முற்றாகச் சேதமடைந்தது. இந்த மோதலின்போது எல்லாமாக 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## 24-8-86


மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர், முறக்கொட்டாஞ்சேனை, செங்கலடி, வந்தாறுமூலை, சித்தாண்டி, கரடியனாறு, கொம்மாந்துறை ஆகிய கிராமங்களில் வாழும் தமிழ் மக்கள் மீது கடந்த சில நாட்களாக சிறீலங்கா இராணுவத்தினர் வெறித்தாக்குதல் நடாத்திவந்தனர். இதை அறிந்த எமது கெரில்லாக்கள், இராணுவத்தினரை எதிர் கொள்வதற்குத் தயாராக அவ்விடங்களில் ஆயுதபாணிகளாகக் காவல் நின்றார்கள்.

இதைத் தொடர்ந்து ஏறாவூர் இராணுவ முகாமில் இருந்து வெளிவந்து, இனஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முயன்ற இராணுவத்தினர், எமது வீரர்களது தாக்குதலைச் சமாளிக்க முடியாது தங்களது முகாம்களுக்குள் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும், எமது வீரர்களுக்கும் இடையே கனகபுரம் எனும் இடத்தில் கடும் சண்டை நடைபெற்றது. இத்தாக்குதல் நடவடிக்கையின் போது இராணுவத்தினர்களுக்கு உதவியாகக் கெலிகொப்டர்களும் (Helicopter), குண்டு வீச்சு விமானங்களும் (Bomber) ஈடுபடுத்தப்பட்டன. எல்லாவித மான எதிர்ப்புகளும் எமது வீரர்களால் முறியடிக்கப்பட்டன. முடிவில் இராணுவத்தினர் தங்களது முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர்.

## 25-8-86

கிளிநொச்சி இராணுவ முகாமை விட்டு வெளியேறிய 200க்கும் அதிகமான இராணுவத்தினர் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து, கவச வாகனங்கள் சகிதம் கணேசபுரம், திருக்கோவில் ஆகிய பகுதிகளினூடாக முன்னேறி வந்தபோது, அம்மூன்று இடங்களிலும் எமது வீரர்கள் இராணுவத்தினரை இடைமறித்துத் தாக்குதல் நடத்தினார்கள். இராணுவத்தினருக்கு உதவியாக நடவடிக்கைகளில் இறங்கிய குண்டுவீச்சு விமானம் ஒன்றும், மற்றும் கெலிகொப்டர் ஒன்றும் குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தின. கெலிகொப்டரில் இருந்து ராக்கெட் மோட்டார் (Rocket mortor) தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 3 மணி நேரம் நடந்த இந்த யுத்தத்தின் முடிவில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர். இராணுவத்தினரிடம் இருந்து 4, M 203 கிரனேட்டுகள், 2 J. R. கிரனேட்டுக்கள், 1, R. P. G. (Propellering Chenge) புறப்பிடிலநிங் சாஜ், ஏராளமான A. K. சுரிகுழல் துப்பாக்கி ரவைகள், மற்றும் 1, T. 56 துப்பாக்கி என்பவைகள் எமது வீரர்களால் கைப்பற்றப்பட்டன.



www.tamilarangam.net



வவுனியா மாவட்டத்தில் உள்ள சிங்களக் கிராமமான மாமடுவ என்னும் இடத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவ வண்டியொன்று எமது வீரர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்குண்டு வெடித்துச் சிதறியது. இதனால் 5 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் 6 பேர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான் குளத்தடியில் கால்நடையாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கொமாண்டோப் பொலிசார்மீது (Commundo Police) எமது கெரில்லாக்கள் மறைந்திருந்து கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டார்கள். இதனால் 4 கொமாண்டோ பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

கிளிநொச்சி இராணுவ முகாமின் மீது எமது வீரர்கள் மோட்டார் செல் தாக்குதல் மேற்கொண்டார்கள். இவைகள் இராணுவ முகாமினுள் விழுந்து வெடித்தன. இதனால் பல இராணுவத்தினர் காயமடைந்தனர்.

## 27-8-86

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினரை பனிச்சன்குளத்தடியில் வைத்து எமது கெரில்லாக்கள் மறைந்திருந்து தாக்கினார்கள். இதன்போது 3 இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேவர முயன்ற கொமாண்டோப் பொலிசாரின் மீது எமது கெரில்லாக்கள் கைக்குண்டுகள் (Grenade) வீசித் தாக்குதல் நடாத்தினார்கள். இதனால் ஒரு கொமாண்டோப் பொலிஸ் கொல்லப்பட்டதுடன். மற்றையவர்கள் பின்வாங்கிப் பொலிஸ் நிலையத்திற்குள் சென்றுவிட்டனர்.

## 28-8-86

மன்னார் மாவட்டத்தில் உள்ள தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து வெளியே வந்து இனப்படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினரை எமது வீரர்கள் நவீனரக ஆயுதங்கள் கொண்டு தாக்கினார்கள். இதனால் பீதியடைந்த இராணுவத்தினர் முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

## 30-8-86

திருகோணமலை மாவட்டத்தில்உள்ள கன்னியா இராணுவ முகாமில் இருந்து கிட்டத்தட்ட 25 இராணுவத்தினர் வெளியே வந்தனர். இவர்களில் 15 பேர் முன்னால் கால்நடையாகச் சென்று கொண்டிருக்க, எஞ்சியவர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பாகப் பின்னால் கவச வாகனத்தில் வந்து கொண்டிருந்தனர். மிகவும் மெதுவாக முன்னேறி வந்து கொண்டிருந்த இராணுவத்தினரை மிகுந்தபுரம் என்னும் இடத்தில் வைத்து எமது கெரில்லாக்கள் தாக்கினார்கள். பின்னால் வந்து கொண்டிருந்த கவச வாகனம் எமது வீரர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்குண்டு முற்றாக எரிந்து நாசமாகியது. இம்மோதலில் எல்லாமாக 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கொமாண்டோப் பொலிசாரை (Commondo Police) எமது கெரில்லாக்கள் R. P. G. (Rocket Propelled Grenade) கொண்டு மறைந்திருந்து தாக்கினார்கள். இதைத் தொடர்ந்து எமது வீரர்களுக்கும், கொமாண்டோக்களுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதன் முடிவில் 10 கொமாண்டோ பொலிசார் கொல்லப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சிங்களக் கிராமமான மாமடுவ எனும் இடத்தில் 25-8-86 அன்று சிங்கள இராணுவத்தினரை எமது வீரர்கள் தாக்கியதில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனால் அப்பகுயில் வாழும் சிங்களவர்கள் மத்தியில் பெரும் பீதி உருவாகியுள்ளது. இதைவிட மேலாக இவர்களுக்குச் சிங்கள இராணுவத்தினர் மேல் இருந்த நம்பிக்கையும் போய்விட்டது. இதன் காரணமாக அங்கே வாழ்ந்து கொண்டிருந்த 75 சிங்களக் குடும்பங்களில் 50 குடும்பங்கள் வெளியேறிவிட்டன.

## 31-8-86

எமது வீரர்களது இடைவிடாத தொடர்ச்சியான கடும் தாக்குதலின் காரணமாக, தங்களுக்குப் பாதுகாப்புக் குறைந்து வருவதை உணர்ந்து கொண்ட சிங்கள இராணுவத்தினர் யாழ் மாவட்டத்தில் உள்ள வசாவிளான் இராணுவ முகாமில் இருந்து முழுவதுமாக வெளியேறி பாலாலி இராணுவ முகாமிற்குச் சென்றுவிட்டனர். இவ்வாறாகப் பின்வாங்கிச் சென்ற இராணுவத்தினர் மீண்டும் அந்த முகாமிற்கு வர முயன்றபோது அவர்கள்மீது எமது வீரர்கள் கடும் தாக்குதல் மேற்கொண்டு விரட்டியடித்தார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் ஜீப் வண்டியொன்று எமது வீரர்களது துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகியது. இதன் காரணமாக 2 பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.

## 2-9-86

மன்னார் மாவட்டத்தில் உள்ள தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து இனப்படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருட்டு 2 கவச வாகனம், 4 ட்ரக் மற்றும் ஒரு ஜீப் வண்டி என்பவைகளில் வெளியே வந்த இராணுவத்தினர், புலிகள் வீதியில் எங்காவது கண்ணி வெடிகளை மறைவாக புதைத்து வைத்திருக்கிறார்களா என்று அவதானித்த வண்ணம் மிகவும் மெதுவாக வந்து கொண்டிருந்தார்கள். இவ்வாறு மிகவும் அச்சத்துடன் வந்து கொண்டிருந்த இராணுவத்தினரை மன்னார் நகருக்கும், எழுத்தூருக்கும் இடையே வைத்து மறைந்திருந்து தாக்கினார்கள். இத்தாக்குதலின் போது புலிகளால் ஏவப்பட்ட R. P. G. (Rocket Propelled Grenade) ஒன்று இராணுவத்தினரது கவச வாகனத்தைக் குறி பிசகாமல் தாக்கியது. இதனால் அந்தக் கவச வாகனம் இரண்டு பகுதிகளாக சிதறியது. மற்றைய கவச வாகனத்தின் ஒருபகுதி சிதைவடைந்தது. இம்மோதலின்போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடியலுக்கு முந்திய ரணங்கள் 6

வெண்மணற் பகுதிகளூடாகச் செல்லும்போது மணற் பகுதியில் பாதங்களில் ஏற்பட்ட சொர சொரப்பான அழுத்தம் காலுக்கு ''ஒத்தடம்'' கொடுப்பது போல் இருந்தது. அந்த வெண்மணற் பரப்பிலேயே உடலை அழுத்தி உறங்க வேண்டும் போலிருந்தது.

சூடான வெப்பக் காற்றை வீசியது அந்த மணற் பகுதி. தூரத்தே மின் வெளிச்சங்கள் தெரிந்தன. எல்லோரது கண்களிலும் தெரிந்த அந்த ஒளி புத்துணர்வைப் பொங்கச் செய்தது.

கெனடி ''டேய் தனபால் இதுதான் காம்ப் (Camp) வெளிச்சமடா'' என்றான்.

கரை தெரியாது அலைந்த படகு திடீரெனக் கலங்கரையைச் சந்தித்த சந்தோஷத்தை விடப் பன்மடங்கு சந்தோஷத்தை அவர்கள் அனுபவித் தனர்.

முகாமை அண்மித்த சிறிது தூரத்திற்கு முன்னர் குழுக்களைப் பிரியும்படி கூறப்பட்டிருந்தது.

அதற்கான தகவல்களை மீண்டும் வோக்கி ரோக்கி ஒலித்தது. ஜெனரேட்டர் இரைச்சல் பல மாகக் கேட்டுக் கொண்டிருந்தது. சிறிது சிறிதாக ஜெனரேட்டர்ச் சத்தம் அதிகரித்துக்கொண்டே போனது. இதனால் ஓரளவு விரைவாக நகரக்கூடிய தாக இருந்தது.

## 9

முகாமைச் சுற்றி நவீன இயந்திரத் துப்பாக்கிகள் நீண்டு கொண்டிருக்கின்றன. வீரக்கனல் தெறிக்கும் பார்வைகள் முகாமைச் சூழ்ந்திருந்தன.

நேரம் பன்னிரண்டு மணிக்கு மேலாகியிருந்தது.

உறக்கமோ, நடந்த களையோ அவர்களுக்கு அப்போது தெரியவில்லை. முகாமின் சகல பகுதிகளும் ஒளி பாய்ச்சுகின்றன. படுத்தவாறே சுடுநிலை எடுத்திருந்த இடங்களில் நின்ற செடி, கொடிகள், சிறு மரங்களைத் தம் கரங்களால் தழுவியது, கரும் சடை விரித்து உறைந்து போயிருந்த இருள்.

இராணுவ முகாமை வெற்றிகரமாகத் தாக்கி முடிப்போம் என்ற நம்பிக்கை எல்லோரிலும் சுடர் விட்டெரிந்தது. முகாமை அண்மித்திருந்த கடல் ஆர்ப்பரித்தது. அலைகடலின் ஓசைகள் காதில் ஒலித்தன.

எந்தக்கணமும் தாக்குதலை நிகழ்த்தத் தயாராய் விழித்திருந்தனர். வெள்ளையனின் ஏவுகணை ஜென ரேட்டரை எப்போது குறிபார்க்கும் என ஆவலோடு காத்திருக்கின்றனர். புதிய வீரமிகு வரலாற்றை எழுதத் துடித்துக்கொண்டிருக்கின்றனர். எமது மக்களின் சொல்லொணாத் துயரங்களுக்குக் காலாக இருந்தவர்களின், சிறிலங்கா இனவெறியரசால் நீட்டப்படும் பணமுடிப்புக்கும், வேறு சலுகைகளுக் காகவும் கூதல் காய்ந்தவர்களின் உதிரம் கறை படியப்போகிறது.

தாக்குதல் குழுவினர் முகாமினுள் நுளைவதற் காகத் தடைகளை வெட்டிக்கொண்டிருக்கின்றனர். தலைப் பின்னல் போன்று வழிமறித்துக் கிடந்த முள்ளுக்கம்பி வேலி அறுந்து விழுகின்றது. சடக்...... சடக் என்ற சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. வேறு திசையாலும் தாக்குதலணியினர் நகர்ந்து கொண்டிருக்கின்றனர். பழசுவின் குழு முழங்கையால் மண்ணில் உந்தியவாறு தோளை உயர்த்தி கைகளில் ஆயுதமேந்தி நகர்ந்து கொண்டிருக்கின்றது.


முழங்கையைச் சிறு கற்கள் குத்தி விடுகின்றன.

சிந்திய இரத்தத்தோடு மண் ஒட்டி கரங்கள் வலு வேறுகின்றன. கால்கள் தரையில் இழுபட்டுக் கொண்டுவரும்போது முட்கள் கீறி விடுகின்றன.

அந்த நேரத்தில் யாரும் அதனை நோக்கவில்லை. விழிகள் முகாமைத் துருவித் துருவி ஆய்ந்தன. சிறு சத்தம்கூட விளைந்து விடுவதை ஒருவரும் அனுமதிக்கவில்லை. எச்சரிக்கையோடு நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

'தடாம்'! என்று வாளியை எடுக்கும் சத்தம் கேட்கின்றது. அந்த விநாடி பழசுவின் குழுவினர் உறைந்துபோய் நின்றனர். மேலும் சப்பாத்துக் கால்கள் நிலத்தில் உரசி வரும் சத்தம் கேட்கின்றது.

ஒரு இராணுவ வீரன்,



**தர்மராசா (ரவி)**

செம்மலை

**மலர்வு : 02-11-1961**
**உதிர்வு : 15-02-1985**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதன்பின் ஓடிவந்த நாய் லொள்...லொள்... எனக் குரைக்கின்றது. மலகூடத்தை நோக்கி வந்த இராணுவத்தினன் பழசு குழுவினர் நின்றதிசை நோக்கி எஸ்,எம்,ஜி, ஆல் சடசடத்து விட்டுமுகாமில் உள்ள இராணுவத்தினர்களின் பெயரைக் கூப்பிட்டுக் கொண்டு ஓடுகின்றான். பழசு குழுவினரில் சொனியின் தலையில் குண்டு பாய்கின்றது. அவனுக்கு அருகில் சங்கரியும் காயமுறுகின்றான். சொனி தலையை மண்ணில் புதைத்து அம்மா ... என்றான். அந்தச் சத்தம் மிகுந்த வேதனையுடன் எழுந்தது. இதயத்துடிப்பு நின்றுவிடாதிருந்தது. கொர் ... கொர் என்ற சத்தத்தோடு இரத்தம் பீறிட்டு மண்ணில் பாய்கின்றது.

சங்கரியின் உடல் செங்குருதியால் தோய்ந்து கிடக்கின்றது. பழசு தன்னோடும் வழி நெடுகிலும் நடந்து வந்த தோழர்களின் நிலையைக்கண்டு துடித்துப் போகிறான்.

அவனது வோக்கி ரோக்கி எல்லாதிக்கிற்கும் செய்தியைச் சொல்கின்றது.

அவர்கள் அனைவரின் முகங்களிலும் கவலை தோய்கின்றது. அந்த விநாடி அவர்கள் அடைந்த வேதனை ......

சொனிக்கு தாயைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை நெடுநாளாய்க் கிடந்தது.

நான் செத்துப் போயிற்று அம்மாவுக்கு சொல்லு மச்சான் என்ற அவனது வார்த்தைகள் நினைவில் சூழ்ந்து கொள்கின்றன. அந்த வீரமறவர்களின் வாழ்வின் முடிவை, நேரில் கண்டுகொள்ள யாரால் தான் முடியும்.

காடு மேடுகளில் எல்லாம் சுதந்திரப் பயிரின் வளர்வுக்காக நாள் தேதி தெரியாமலல்லவா அவர்கள் அலைந்தார்கள்.

கவலை தோய்ந்த நாட்களிலும் நிலை குலையா தல்லவா நின்றனர்.

அவர்கள் நடந்த பாதைகள்............

அவர்கள் பதித்த தடயங்கள்............அழிந்து விடப்போவதில்லை. முன்னோடிகள் கடந்த சுவடுகள் இன்னும் அவர்களின் நெஞ்சங்களில்.

சங்கரி முனகிக் கொண்டு தவித்தான்.

எந்தத் துயரங்களையும் வேதனைகளையும் தாங்கிக்கொள்ளும் மனோ வலிமை மிக்க அவன் வறுமைமிக்க ஒரு குடும்ப நிலையில் இருந்தும் தன்னை விடுதலைக்காக முழுமையாக அர்ப்பணித்த வன்.

அவனது தாய் ''வெளிநாடு செல்லும்படி அவனைக் கேட்டாள்.''

அப்போது அவன் ''என்னம்மா இது'' என்று தாயை அனுதாபத்தோடு நோக்கினான்.

அயல் வீட்டில் தானே ''மரண ஓலம்'' கேட்கிறது என இருந்துவிட முடியுமா அவனால்.

சிறந்த போர்க்குணம் அவன் இராணுவத் தினரை நேருக்கு நேர் எதிர்கொண்டு போராடிய வீர வரலாறுகளை மறந்துவிட முடியுமா ?

கடலில் எமது நடவடிக்கைகளை அவன் எந்த நேரத்திலும் சலிக்காது செய்து முடிப்பான்; அதிக நிறையுள்ள, இயந்திரங்களைத் தனியாகச் சுமந்து செல்வான். படகைக் கரையிழுத்து நிறுத்தும்போது வலுவேறிய அவனது கரங்களில் தசைகள் திரண்டு முறுக்கேறி நிற்கும்.

முற்கோபக்காரனாக இருந்தாலும் அவன் இரக்கமுள்ளவன். தனது தோழர்கள் யாராவது துக்கித்து இருப்பதைச் சகித்துக்கொள்ள மாட்டான். இவ்வாறான நற்குண இயல்புகளை எல்லாம் கொண்டிருந்த எமது தோழர்களை இழந்து விட்ட நாம் வெற்றிகரமாகப் பின்வாங்கியிருக்கலாம். அவ்வாறு நாம் நடந்து கொண்டிருந்தால் எமது மண்ணின் வேதனைகளுக்கு அந்த நடவடிக்கை மீட்பளித் திருக்குமா ?

# 10

கொஞ்சமா இம்மண்ணின் வேதனைகள்.........? முல்லைத்தீவின் கரையோரக் கிராமங்களில் ஏற்பட்ட சொல்லொணாத் துயரங்கள் இன்னும் தொடர் கின்றன.

அகதிகள் முகாம்களிலே தமது எதிர்கால வாழ்வு எப்படி அமையுமோ என்ற அங்கலாய்ப்பு அம்மக் களை வாட்டுகிறது. தமிழ் மக்களின் பொருளா தாரம், கல்வி, கலை, கலாச்சாரம் அனைத்தும் அங்கே பறிக்கப்பட்டதோடு பாரம்பரியமாய் வாழ்ந்து வந்த பண்பாட்டு ஊற்றுக்களாக விளங்கிய அந்தக் கிராமங்களைத் தடை செய்யப்பட்ட பிரதேசமாக சிறிலங்கா இன வெறியரசு பிரகடனம் செய்தது.

அதன் பின்னர்;

அங்குள்ள தமிழ் மக்கள் வியர்வை சிந்தி முழு உழைப்பையும் நல்கி வளர்த்தெடுத்திருந்த தமது அந்தக் கிராமத்தின் முழு வளங்களையும் அனுபவிக்க முடியாமல் வெளியேறி விட்டனர்.

யாரும் அங்கு வாழ முடியாது. உட்செல்ப வர்கள் எல்லாம் 'தெரு நாய்களை'ப்போல் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

முழு மக்களினதும் உழைப்பிலும் உருக்கொண் டிருந்த அந்தக் கிராமம், காடையர் கூட்டத்தின் குடியிருப்புகளாக, விலங்குகளின் பண்ணைகளாக மாறப் போகிறது. ஆயுதம் தரித்த நிலையில் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்துவிடத் திட்ட மிட்ட அரசின் நடவடிக்கைகளினால்.......அலம்பில் கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கொக்குத் தொடு வாய், தென்னைமரவாடி போன்ற தமிழ்க் கிராமங் களில் தொடர்கின்றன.

முல்லைத்தீவின் கிராமங்களில் புகுந்து இவர் களின் இராணுவ அராஜகம் தலைக்கு மீறியது. கோரத் தாண்டவம் ஆடினர். எழில் சுமந்த அந்தக் கிராமத்தின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவர் களின் உடைமைகள் சூறையாடப்பட்டன.

எத்தனையோ உயிர்களைப் பலி எடுத்தார்கள். எங்கும் எலுப்புக் கூடுகளும், மண்டை ஓடுகளுமாக நிறைந்து மயானமாகிவிட்ட அப்பிரதேசங்களில் இன்னும் பிணவாடை அகலவேயில்லை.

எமது மக்கள் முடிவற்ற சோகத்தை அனுப விக்கிறார்கள். கற்பழிக்கப்பட்ட சகோதரிகள், விதவைகளாக்கப்பட்ட பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கூடக் கொலை வெறித்தனத்தில் சிக்கி னர். வாழ்வில் துயரத்தை அனுபவிக்கும் எமது மக்களின் நிலையை எம்மால் எவ்வளவுக்குத்தான் சகித்துக்கொள்ள முடியும்......?

எமது மண்ணில் தொடர்ந்தும் வேதனைகளும், துன்பங்களுமே நிறைந்திருப்பதைத் தொடர்ந்தும் தாங்கிக்கொள்ள முடியுமா? நாம் வந்த பிரதேசங் கள் பறிபோவதை அனுமதிக்க முடியுமா?

எமது சுதந்திர தாகத்தை இவர்கள் அடக்கிவிட முயலப் பலவழிகளைக் கையாளுகிறார்கள். இக் கிராமங்களின் அழிவுகள் அந்த வகையான அந்நியப் படுத்தலின் கோர முகங்களைத்தான் காட்டிக் கொண்டிருந்தன. ''எந்த நிலையிலும் துவழாது எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.''

(தொடரும்)

www.tamilarangam.net



# செய்திக்கதிர்

**தமிழ் மக்கள் மட்டுமல்ல, அவர்களின் வழிபாட்டுத் தலங்களும் அழிக்கப்படுகின்றன.**

போராளிகளை எதிர்கொள்ள முடியாத சிங்கள இராணுவத்தினர், முகாம்களுக்குள் இருந்துகொண்டு கண்மூடித்தனமாக மேற்கொள்ளும் பீரங்கி, செல் தாக்குதல்களினால் அப்பாவித் தமிழ் மக்கள் மட்டும் கொல்லப்படவில்லை; அவர்களால் வழிபடப்படும் கோயில்கள், தேவாலயங்களும் சிதைக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் இந்துக்களின் முக்கிய வழிபாட்டுத் தலமான தொண்டமனாறு செல்வச்சந்நதி முருகன் ஆலயம், நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலயம் என்பன சில மாதங்களுக்கு முன் எரியூட்டப்பட்டன.

தற்போது, பருத்தித்துறை முகாமிலிருந்து சிங்கள இராணுவத்தினர் ஏவிய செல்களினால் அப்பகுதியில் உள்ள கற்கோவளம் மெதடிஸ்ட் தேவாலயமும், பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலயமும் கடுமையான சேதத்துக்குள்ளாகியிருக்கின்றன.

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மையில் உள்ள குருநகர்த்தீவு என்னுமிடத்திலுள்ள பழமை வாய்ந்த புனித அந்தோனியார் தேவாலயம் மண்டைதீவு இராணுவத்தினரால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேவாலயத்தில் இருந்த மரங்கள் ஓடுகள் என்பனவும் சிங்கள இராணுவத்தினரால் இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

**சிங்கள இராணுவத்தின் படுகொலைகள் அம்பலத்துக்கு வருவதால் மரண விசாரணைகள் இடைநிறுத்தம்.**

மூதூரிலுள்ள வெரியவெளி அகதிகள் முகாம், மணலச்சேனைக் கிராமம் ஆகியவற்றில் 49 தமிழர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக மூதூர் நீதவான் (மாஜிஸ்திரேட்) திரு. கதிரவேற்பிள்ளை நடத்திவந்த விசாரணைகளை உடன் நிறுத்துமாறும், இம்மரணவிசாரணை தொடர்பான சகல பதிவேடுகளையும் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்குமாறும் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்விசாரணைகளைத் தடை செய்யுமாறு போலீஸ் மா அதிபர் (ஐ ஜி. பி.) தாக்கல் செய்த மனுவையடுத்தே கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. கடந்த ஜூலை மாதம் 3ம் தேதி இம்மரணங்கள் தொடர்பான விசாரணை நடத்தப்பட்டபோது மரணமானவர்கள் சார்பில் 49 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. விசாரணை நடத்திய நீதவான் திரு. கதிரவேற்பிள்ளை 19 பேரின் மரணங்கள் சிங்கள இராணுவத்தினரால் செய்யப்பட்ட கொலை என்று தீர்ப்பளித்தார். 26 பேரின் சடலங்கள் பார்வையிட முடியாததால் அவைபற்றி தீர்ப்பு வழங்க முடியாதெனவும் அவர் கூறியிருந்தார்.

**வல்வை இராணுவ முகாமின் பாதுகாப்பு அரணாக விளங்கிய வீடு புலிகளின் தாக்குதலினால் தரைமட்டம்.**

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினருக்கு மறைவிடமாகவும், பாதுகாப்பு அரணாகவும் இருந்துவந்த முகாமுக்கு முன்பாக இருந்த மாடிவீட்டை விடுதலைப் புலிகள் குண்டு வைத்துத் தரைமட்டமாக்கினர். வல்வெட்டித்துறை இராணுவத்தினர் கடந்த சில வாரங்களாக முகாமை விட்டு வெளியேவந்து, இந்த மாடிவீட்டின் மேற்பகுதியில் பதுங்கியிருந்து தூரத்தேயுள்ள வீதியாற் செல்லும் பொதுமக்களைச் சுட்டுக்கொன்றும், காயப்படுத்தியும் வந்தனர்.

சிங்கள இராணுவத்தினரின் இந்நடவடிக்கையை முறியடிக்கும் முகமாகவே இராணுவத்தினரின் பலத்த கண்காணிப்பையும் மீறி விடுதலைப்புலிகள் இந்த மாடி வீட்டைக் குண்டுவைத்துத் தகர்த்தனர்.

**சிங்களவரைக் குடியேற்றுவதற்காகத் தோட்டப் பகுதியில் இருந்து 15000 மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற்றம்.**

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்குக் காணி வழங்கும் போர்வையில் நீண்டகாலமாக வேலை பார்த்துவந்த நுவரேலியா மாவட்டம் மகாஊய தோட்டத்திலிருந்து 1500 மலையகத் தமிழ்த் தொழிலாளர்களை சிங்கள அரசு வெளியேற்றிவிட்டு, அந்த இடத்தைப் பங்கீடுசெய்து சிங்களவர்களுக்குக் கொடுத்துள்ளது.

இந்தக் காணிப் பங்கீட்டினால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ்த் தொழிலாளர்களை நுவரேலியா மாவட்டத்தைவிட்டே வேறு மாவட்டத்தில் உள்ள தோட்டங்களுக்கு அனுப்பும் முயற்சியும் நடந்து வருகிறது. நுவரேலியா மாவட்டத்தில் ஏறத்தாள 50% மலையகத் தமிழர்கள் இருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் தமிழர் விகிதாசாரத்தைக் குறைக்கும் முயற்சியாகவே சிங்கள அரசு இதுபோன்ற குடியேற்றங்களை நடத்திவருகிறது.

**தமிழ் மீனவர்களைப் பணயம் வைத்து, இராணுவ முகாமுக்கு உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன.**

கடலில் மீன் பிடிக்கச் சென்ற தமிழ் மீனவர்களைப் பிடித்து அவர்களைப் பணயமாக வைத்துக்கொண்டு, தமது கப்பலிலிருந்து பல பொருட்களையும், உணவுப் பண்டங்களையும் வல்வெட்டித்துறை முகாமுக்குச் சிங்களக் கடற்படையினர் எடுத்துச் சென்றனர்.

நான்கு வள்ளங்களில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ் மீனவர்களின் வள்ளங்களைப் பிடித்து, தமது படகில் கப்பலிலிருந்த ஆயுதங்களையும், உணவுப் பொருட்களையும் இறக்கி, மீனவர்களின் படகுக்கு இடையில் வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்ட தம் படகு வர முகாமுக்குக் கொண்டுசென்று பொருட்களை இறக்கிய கடற்படையினர், பின்னர் உயிர்காத்த அந்த மீனவர்களுக்குக் குளிர்பானம் வழங்கி உபசரித்து அனுப்பிவைத்தனர்.

www.tamilarangam.net



நேரடியாகத் தமது படகில் பொருட்களை இறக்க முயற்சித்த கடற்படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலைத் தொடுத்து விரட்டியடித்ததால், தமிழ் மீனவர்களைப் பணயம் வைக்கும் இந்தப் புதிய உத்தியைச் சிங்களக் கடற் படையினர் கையாளத் தொடங்கியுள்ளனர்.

**புலிகளின் அதிரடித் தாக்குதலினால்**
**சிங்கள இராணுவத்தினர்களுக்குச் சித்தப்பிரமை !**
**ஏராளமான இராணுவத்தினர்**
**மனநோய் மருத்துவமனையில் சிகிச்சை !!**

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இதுவரை நிகழ்ந்த தமிழ்ப் போராளிகளின் கண்ணிவெடித் தாக்குதல் களினால், சிங்களப்படை வீரர்கள் பலர் சித்த சுவாதீனமற்றுள்ளனர். இவ்வாறு கடுமையாகப் பாதிப்புக்குள்ளான ஐம்பத்துமூன்று இராணுவத் தினர் கொழும்பில் அங்கொடை மனநோய் மருத்துவமனையில் விசேட வைத்திய சிகிச்சை பெறு கின்றனர். இந்த 53 பேரில் நால்வர் உயரதிகாரிகள்.

இவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காகவே அங்கொடை மனநோய் மருத்துவமனையில் விசேட பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்களின் குடும்பங்களுக்கு விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன. இங்கு சிகிச்சைக்குக் கொண்டுவரப்பட்டவர்கள் மன நோய் முற்றிய நிலையில் உள்ளவர்கள் மட்டும்தான். இவர்கள் தவிர இன்னும் நூற்றுக்கணக்கான சிங்கள இராணுவத்தினர் வடகிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் மனநோயுள்ள நிலையில் இருந்து வருகின்றனர். இதுபற்றி அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற ராய்ட்டர் நிருபரிடம் யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ உயரதிகாரிகள் ''யாழ் கோட்டைக்கு அவசரமாக மனோதத்துவ டாக்டர்கள் தேவையாகவும், புலிகளின் இடை விடாத மோட்டார்த் தாக்குதல்களினால் ஏராள மான இராணுவத்தினர் அமைதியற்றுக் கிலேச மடைந்துள்ளனர்'' எனக் கூறியிருந்ததும் குறிப் பிடத்தக்கது.

**சிங்களச் சிப்பாய்களுக்குச் சொறி, சிரங்கு !**

யாழ்கோட்டை இராணுவ முகாமில் புலிகளின் முற்றுகையால் வெளியே வரமுடியாத நிலையில் அடைபட்டிருக்கும் இராணுவச் சிப்பாய்கள் பெரும்பாலோருக்குச் சொறி, சிரங்கு போன்ற தோல் வியாதிகள் ஏற்பட்டுள்ளன. இந்த வியாதிகளினால் கஷ்டப்படும் அவர்களை மாற்றி வேறு சிப்பாய்களை யாழ் கோட்டைக்குக் கொண்டுவருவதில் உள்ள சிரமங்கள் பற்றி பாதுகாப்பு வட்டாரங்கள் கவலை அடைந்துள்ளன. இவைதவிர கண், காது நோய்கள் எலும்பு முறிவு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் கொழும்பு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

**மாகாண சபைகளின் அதிகார வலிமை இவ்வளவுதான்..**

''மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி வாபஸ் வாங்கமுடியும்'' என்று பண்டார கமவில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பேசிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார். அப்பொதுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்:-

''ஜனாதிபதி ஜெயவர்த்தனா எத்தனையோ இரவுகளை நித்திரையின்றிக் கழித்தே புதிய யோசனைகளைத் தயாரித்தார். மாகாண சபை முறை சமஷ்டி அரசமைப்பின் சாயல் கொண்ட தல்ல. மக்கள் தங்கள் நாளாந்த கடமைகளைத் தாங்களே தீர்மானித்துச் செய்யும் சுயாட்சி உரிமை களையே அது வழங்குகின்றது'' என்று கூறினார்.

மாகாண சபைதான் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு என்றும் சிலர் பேசுகிறார்கள். இந்த நிரந்தர மற்ற சபைகளைப் பெறவா தமிழினம் இவ்வளவு அழிவுகளையும் சந்தித்துப் போராடியது?

**ஈழநாடு பத்திரிகை நிருபர் நான்கு மாதங்களாகத் தடுப்புக்காவலில் !**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகையின் கொழும்பு நிருபர் திரு. சி. கந்தசாமி கடந்த நான்கு மாதங்களாக இராணுவத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். தனியார் பஸ் ஒன்றில் இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் சில வற்றைப் பார்சலாகக் கொடுத்துவிட்டது தொடர் பாக விசாரணைக்கெனக் கடந்த மே மாதம் 14-ம் தேதி கொழும்பு போலீசாரினால் அழைத்துச் செல் லப்பட்ட திரு. கந்தசாமி மறு தினம் கொழும்பி லிருந்து ஹெலிகாப்டர் மூலம் அனுராதபுரம் கொண்டு செல்லப்பட்டு, அங்கு தடுத்து வைக்கப்பட் டுள்ளார். இவர் கொடுத்த பார்சல்களைக் கொண்டு வந்த குறிப்பிட்ட பஸ்சின் ஊழியர்களும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஈழநாடு பத்திரிகை இராணுவத்தினர் நடத்தும் கொடுமைகளைக் கடுமையாகக் கண்டித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**193 சிங்களப் படையினர் மரணம்.**

இந்த ஆண்டில் இதுவரை 193 சிங்கள ஆயுதப் படையினர் தமிழீழ விடுதலைப் போராளிகளின் தாக் குதலில் உயிரிழந்திருக்கின்றனர் என்று இலங்கை தேசியப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. உயிரிழந்த படையினரின் விபரம்:—

இராணுவம்—155
போலீஸ்—24
கடற்படை—8
விமானப்படை—6

(சிங்கள அரசு தந்துள்ள இந்த அறிக்கையில் இறந்த சிங்களப் படையினரின் தொகை மிகவும் குறைவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.)

**தமது பாதுகாப்புக்காகத் தமிழிளைஞர்களைப் பணயம் வைக்கிறது சிங்கள இராணுவம்.**

வவுனியா பறையனாலங்குளம் முகாமில் உள்ள சிங்கள இராணுவத்தினர் அங்கு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களைத் தாம் செல்லும் இடங்களுக்குத் தமது பாதுகாப்புக் காக அழைத்துச் செல்கின்றனர். தமிழ்ப் போராளி களின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காகவே இந்த நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது சிங்கள இராணுவம்.

**மாங்குளம் முகாமில் தமிழிளைஞர்களுக்குக் கரடித் துன்புறுத்தல்.**

மாங்குளம் இராணுவ முகாமில் சிங்கள இராணு வத்தினரால் கரடி ஒன்று வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த முகாமில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப் பட்டு தடுத்து வைத்துள்ள தமிழ் இளைஞர்கள்மீது இந்தக் கரடியைப் பாயவிட்டுச் சித்திரவதை மேற் கொள்ளப்படுகிறது.

அத்துடன் இராணுவத்தினர் தேடுதல் வேட்டைக்குச் செல்லும்போது, இந்தக் கரடியையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றனர். சந்தேக நபர் ஒருவரைத் தேடி அவரது வீட்டுக்குச் செல்லும் இராணுவத்தினர் இந்தக் கரடியை முன்னே அனுப்பி விட்டுத் தாம் அதன் பின்னே செல்கின்றனர்.

www.tamilarangam.net



# தமிழீழத்தில் அரச பயங்கரவாதம்

### 9-9-86

யாழ் மாவட்டத்தில் உள்ள பருத்தித்துறை இராணுவமுகாமில் இருந்து சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட மோட்டார்த் தாக்குதலால் பல அப்பாவித் தமிழ் மக்கள் காயமடைந்தார்கள். இராணுவத்தினரால் ஏவப்பட்ட குண்டு ஒன்று வீடு ஒன்றின் மீது விழுந்து வெடித்தமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, சின்னராசா யோகேஸ்வரி, (14), சின்னராசா சீதாலட்சுமி (14), சின்னராசா சீதாலட்சுமி (20), என்போர் காயமடைந்தனர். தும்பளையைச் சேர்ந்த பொன்னம்பலம் லோகநாதன் (16) என்பவர் பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் காயமடைந்தார். காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செல் (Shell)த் தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பாடசாலைகள் யாவும் உடனடியாக மூடப்பட்டன. சந்தையில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். இந்தத் தாக்குதலில் கமலினி (வயது 5), ரேவதி (7), கிரிராணி (7), எனும் 3 சிறுமியர்கள் உட்பட எல்லாமாக 13 பேர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பூமரச்சாலை எனும் இடத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 10க்கும் அதிகமான தமிழ் விவசாயிகளை நோக்கி, அவ்வீதி வழியாக ரோந்து சென்று கொண்டிருந்த ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதைக் கண்ட விவசாயிகள் காட்டுப் பகுதியை நோக்கி வேகமாக ஓடினார்கள். அப்போது காட்டுக்குள்ளும் பதுங்கி இருந்த இராணுவத்தினர் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தில் பலர் கொல்லப்பட்டதுடன், மேலும் சிலர் கைது செய்யப்பட்டனர்.

### 10-9-86

சிறீலங்கா இராணுவத்தினர் தமிழ் இனப் படுகொலைகளில் மட்டுமல்லாமல் கலாச்சாரக் கொலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். வவுனியா மாவட்டத்தில் உள்ள மாங்குளம் மாவடிப்பிள்ளையார் கோவிலின் உற்சவமூர்த்தி சிலை ஆயுதப்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டு நாசமாக்கப்பட்டுள்ளது. இவ் ஆலயத்தில் அன்னதானம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அங்கு வந்த இராணுவத்தினர் கோயில் குருக்களையும், அடியார்களையும் தாக்கிக் காயப்படுத்திவிட்டு கோயிலினுள்ளே புகுந்து அந்தச் சிலையை வெளியே கொண்டுவந்து உடைத்துள்ளார்கள். பின்னர் இவ் ஆலயத்தில் ''சதுர்த்தி விழா'' நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அங்கு வந்த அரசபடையினர் அங்கே வழிபாடு நிகழ்த்திக் கொண்டிருந்த அப்பாவித் தமிழ்ப் பக்தர்களைத் தாக்கிக் காயப்படுத்தினர்.

### 11-9-86

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஈரான் குளம் எனும் இடத்தில் சிறீலங்காவின் இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 3 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் படுகாயமடைந்தார்கள்.

### 16-9-86

இராணுவத்தினரது தொடர்ச்சியான தாக்குதலால் தமிழீழப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இராணுவத்தினர் முகாமினுள் இருந்து கொண்டு ஏவும் மோட்டார்க் குண்டுகளாலும், ஆகாயத்தில் இருந்து வீசும் குண்டுகளாலும், மற்றும் எரியூட்டு குண்டுகளாலும் (Incendicurg), 4000 ஹெக்டர் நெல் வயல்கள் பாதிப்புக்குள்ளாகியும், அறுவடை செய்ய முடியாத நிலையிலும் உள்ளன. இதனால் தமிழ் மற்றும் இஸ்லாமிய விவசாயிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

### 18-9-86

மட்டக்களப்பு மாவட்டத்தில் முற்பகல் 11-15 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் தமிழ் மக்களின் மேல் வெறித்தனமான, கண்மூடித்தனமான தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டனர். நகரில் இருந்த தமிழ், மற்றும் இஸ்லாமிய மக்களது கடைகளும், வீடுகளும் சூறையாடப்பட்ட பின்னர் தீவைக்கப்பட்டன. அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டு வரிசையாக நிறுத்தப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களது உடல்களில், 12 பேரினது உடல்கள் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டன. இருவரினது உடல்களைத்தவிர மற்றையவர்களது உடல்களிலெல்லாம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. 1½ வயதான குழந்தையொன்றும் இச்சம்பவத்தின்போது இராணுவத்தினரது மிருகவெறிக்குப் பலியாகியது. மட்டக்களப்பில் உள்ள செயின்ட் அந்தோணி தேவாலயத்தினுள் புகுந்த இராணுவத்தினர், அங்கே பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 65 வயதான கிருத்தவ பாதிரியார் ஒருவரைத் தமது துப்பாக்கிகளுக்கு இரையாக்கினர். இனப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுகொலைக்கு உள்ளாகியவர்களில் பெரும்பாலானோர் 15 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்டவர்களேயாவர். சுகவீனம் அடைந்திருந்த தமது குழந்தைக்கு மருந்து வாங்குவதற்காகக் கடைக்குச் சென்ற தந்தையார் ஒருவரும் இராணுவத்தினரது கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்திற்குப் பலியானார். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விமான நிலையத்திற்கு அருகேயுள்ள மயானத்தில் 35 தமிழர்களது உடல்கள் பாதுகாப்புப் படையினரால் எரிக்கப்பட்டன. இதன் பின்னர் இந்த மயானம் மூடப்பட்டது. இவர்களது இந்தத் தாக்குதலுக்கு எல்லாமாக 47 தமிழ் மக்கள் பலியாகினர். 18 பேர் காணாமல் போயினர். சந்தேகத்தின் பெயரில் பள்ளிச் சிறுவர்கள் உட்பட 150க்கும் அதிகமான தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கல்லடி இராணுவமுகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அரசபடையினரது அராஜக நடவடிக்கைகளால் பீதியடைந்த 10,000-க்கும் அதிகமான தமிழ், இஸ்லாமியத் தமிழ் மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஏதுவாக் மேலும் 2 புதிய முகாம்கள் சிறீலங்கா அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளன. இம் முகாம்களில் பாகிஸ்தானில் விசேட பயிற்சிபெற்ற (100-க்கும் அதிகமான) அதிரடிப் படைப் பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## 22-9-86

புலிகளது தாக்குதலுக்குப் பயந்து இராணுவ முகாமின் உள்ளேயே பதுங்கியிருக்கும் இராணுவத்தினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளின் மேல் மோட்டார் தாக்குதலையும், விமானக் குண்டு வீச்சையும் நடாத்தி வருகின்றனர். இவ்வாறாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள, நீராவிப்பிட்டி, மாமுனை ஆகிய பகுதிகளின்மேல் ஹெலிகொப்டரில் இருந்து ராக்கெட் (Rocket) தாக்குதல், மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் என்பவைகளை மேற்கொண்டனர். இராணுவத்தினரது கண்மூடித்தனமான தாக்குதலுக்கு எந்தப் பாவமும் அறியாத 3 அப்பாவித் தமிழ் மக்கள் பலியானார்கள். மேலும் பலர் காயமடைந்தனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல வீடுகள், ஹெலிகொப்டரில் இருந்து ஏவப்பட்ட ராக்கட் குண்டுகளுக்கு இலக்காகிச் சேதமடைந்தது.

மனோதத்துவ ரீதியில் மிகவும் பாதிப்படைந்த நிலையில் காணப்படும் சிறீலங்கா இராணுவத்தினர், யாழ் கோட்டை இராணுவ முகாமினுள் இருந்து கொண்டு பொதுமக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இராணுவத்தினரது இந்த ஈவு இரக்கமற்ற தாக்குதலுக்கு அப்பாவித் தமிழ் மகன் ஒருவர் பரிதாபமான முறையில் பலியானார். மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

இராணுவத்தினரதும், சிங்கள அரசினதும் ஒடுக்குமுறைகளும், கொடுமைகளும் இலங்கைத் தமிழ் மக்களோடு நின்றுவிடவில்லை. இவைகள் யாவும் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் மீதும் பிரயோகிக்கப்படுகின்றது. இதற்குச் சான்றாக இப்பகுதியில் இந்தியத் தமிழ்மக்கள் வசித்து வந்த சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பை, இராணுவப் பயிற்சிமுகாம் ஒன்றை அமைக்கும் நோக்குடன் சிறீலங்கா அரசானது பலாத்காரமாகச் சுவீகரித்துள்ளது. சிங்களவர்களது இந்த அத்துமீறிய செயலைக் கண்டிக்கும் வகையில் கிட்டத்தட்ட 5,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

## 24-9-86

போராளிகளையும், சாதாரண பொதுமக்களையும் இனம்கண்டு கொள்ள முடியாத சிறீலங்கா கடற்படையினர், கடலில் மீன் பிடித்துக்கொண்டிருக்கும் அப்பாவித் தமிழ் மீனவர்களை நோக்கிக் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதோடு, அவர்களது படகுகளையும், மீன் பிடி வலைகளையும்கூடச் சேதப்படுத்துகின்றனர். யாழ் மாவட்டத்தில் உள்ள ஊர்காவல்துறை கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ் மீனவர்களை நோக்கி எந்தவிதமான காரணங்களும் இல்லாமல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் பீதியடைந்த மீனவர்கள் தங்களது உடைமைகளையும், படகுகளையும் கைவிட்டுவிட்டு, தங்களது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்குடன் நீந்திக் கரைசேர்ந்தார்கள். அதிஷ்டவசமாக ஒருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகவில்லை. இதன் பின்னர் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த இடத்தையடைந்த கடற்படையினர், மீனவர்களது படகுகளையும் சேதப்படுத்தினர்.

இதே போன்றதொரு செயல் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள செம்மலை கடற்பகுதியிலும் சிறீலங்கா கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டது. இந்த அடாவடித்தனத்தின்போது தமிழ் மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளும், இயந்திரங்களும், கடற்படையினரால் பலாத்காரமாக அபகரித்துச் செல்லப்பட்டன. இவ்வாறாக, தமிழ் மக்களது முக்கிய பொருளாதார வருவாய்களை எல்லாம் சிறீலங்கா அரச படையினர் தடுத்தும், அழித்தும் வருகின்றனர்.

## 25-9-86

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கும்புறுப்பிட்டி எனும் தமிழ்க் கிராமத்தின் மீது சிறீலங்கா கடற்படையினர் மோட்டார்க் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டனர். பலமணிநேரமாக நடைபெற்ற இந்தக் குண்டுத் தாக்குதலின் முடிவில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும் பலர் பலமான காயங்களுக்கு உள்ளாகினர். கொல்லப்பட்டவர்களில் வயோதிபர்களும், சிறுவர்களும், பெண்களும் அடங்குவர். இத்தாக்குதலின்போது மீனவர்களுக்குச் சொந்தமான, கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல படகுகள் சேதமடைந்தன. அத்தோடு பல வீடுகளும் செல் (Shell) விழுந்ததால் மோசமாகச் சேதமுற்றன. இக்குண்டுத் தாக்குதலால் பீதியடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சிதறியோடினர். இதையடுத்து அந்தக் கிராமத்தினது நாளாந்த வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. ''போராளிகளது தளங்கள் மேல் தாக்குதல் மேற்கொள்கிறோம்'' என்பதுதான், இந்த அட்டூழியங்களுக்கெல்லாம் சிறீலங்காவின் பாதுகாப்புப் படைகள் கொடுக்கும் விளக்கமாகும்.

நினைத்துப்பார்க்கவே, நெஞ்சம் கலங்கும் சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. சில நாட்களுக்கு முன்னர் இராணுத்தினரது மோட்டார் தாக்குதலுக்கு இலக்காகி தமிழ் மகன் ஒருவர் கொல்லப்பட்டார். இதையடுத்து இவரது சகோதரரும், அதேயிடத்தில் சிறீலங்கா அரசபடையினரது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இந்தப் பரிதாபமான சம்பவம் யாழ் மாநகரசபை மண்டபத்திற்கு அருகே நடைபெற்றது. இம்மண்டபம் யாழ் கோட்டை இராணுவமுகாமில் இருந்து கிட்டத்தட்ட 100 யார் தூரத்தில் இருக்கிறது.

www.tamilarangam.net



# ஜே ஆரை நம்புவதா? லலித்தை நம்புவதா?

வங்கியாளர் கருத்தரங்கொன்றில் பேசிய ஜனாதிபதி, ''இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதுவே அரசாங்கத்தின் நோக்கம்; இராணுவத் தீர்வுகாண முற்பட்டால் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் அநியாயமாகப் பல உயிர்கள் அழிந்துவிடும்'' என்றும் ஜே ஆர் கூறியுள்ளார்.

யார் என்ன சொன்னாலென்ன மாகாண சபை அமைக்கப்படுவது நிச்சயமென்றும், அடுத்த இரண்டு மாதத்துக்குள் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விடுமென்ற நம்பிக்கை தமக்குண்டு என்றும் தெரிவித்துள்ளார்.

இரத்மலானையில் கொத்தலாவலை இராணுவப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் அமைச்சர் அத்துலத்முதலி பேசுகையில், ''இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுமட்டும் காண முடியாது; இராணுத் தீர்வும் காணப்பட வேண்டும்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

இங்கு இராணுவத் தீர்வு என்று அத்துலத்முதலி எதனைக் குறிப்பிட்டுக் கூறுகிறார்?

இராணுவத் தீர்வு காணப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அநியாயமாக இறக்க நேரிடும் என்று ஜனாதிபதி சொல்கிறார்

அப்படியானால் வடக்குக் கிழக்கு மாகாணத்தி லுள்ள தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்குப் பெயர்தான் இராணுவத் தீர்வு என்று அத்துலத் முதலி ஒப்புக் கொள்கிறார் என்றுதானே அர்த்தம்.

இந்த நிலையில் இனப் பிரச்சினைக்கு நியாய மான தீர்வை விரும்பும் தமிழ் பேசும் மக்கள் ஜே. ஆரை நம்புவதா? அல்லது அத்துலத் முதலியை நம்புவதா?

நன்றி : ஈழமுரசு 31-7-86

2 ம் பக்கத் தொடர்ச்சி

கட்டுப்பாட்டு விலை வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| பெற்றோல் | லீற்றர் | 17-50 | போத்தல் | 13-46 |
| டீசல் | ,, | 12-00 | ,, | 9-23 |
| மண் எண்ணெய் | ,, | 10 00 | ,, | 7-70 |


இன்று முதல் இந்தக் கட்டுப்பாட்டு விலை விற்பனை நடைமுறைக்கு வருகிறது. இதனை மீறுவது ஒரு மக்கள் விரோத செயற்பாடாகவே கருதப்படும்.

## மக்களைக்காக்க புலிகள் நடத்தும் மோட்டார்த் தாக்குதல்.

தமிழீழத்தின் வடபகுதியில் புலிகளின் தாக்கு தலுக்கு அஞ்சி, தமது முகாம்களுக்குள்ளேயே பதுங்கியிருக்கும் சிங்கள இராணுவம், உள்ளேயிருந்த படியே பீரங்கிகளையும், மோட்டார்களையும் பயன் படுத்திக் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி வருகிறது. இவர்களினால் ஏவப்படும் செல் மூன்று மைல் தூரம் வரை சென்று விழுவதால் தமிழ் மக்களுக்கு ஏராளமான உயிர்ச்சேதமும், பொருட் சேதமும் ஏற்படுகிறது.


மக்களைக்காக்கும் பணியில் தம்மை அர்ப்பணித் துக் களத்தில் இறங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள், அப்பாவி மக்கள் மீது குண்டுகளை ஏவும் சிங்கள இராணுவத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தம்மால் தயாரிக்கப்பட்ட '8", 6" மோட் டார் செல்களைக் கொண்டு சிங்கள இராணுவத் தினர் பதுங்கியிருக்கும் முகாம்கள் மீது எதிர்த் தாக்குதலை நடத்திவருகின்றனர். இதனால் தற்போது முகாம்களுக்குள்ளும் பாதுகாப்பற்ற நிலையில் சிங்கள இராணுவத்தினர் மரணபீதியுடன் இருந்து வருகின்றனர்.

# களத்தில் உயிர்நீத்த விடுதலைப் புலிகள்



தர்மலிங்கம் ரதீஸ்வரன்
(தோமஸ்)
அரியாலை
மலர்வு : 09-08-59
உதிர்வு 11-07-86

பருத்தித்துறையில் சிங்கள இராணுவத் தினருடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்தனர்.



லெப்டினன்ட் கந்தன். ரவி
(எட்மண்ட், சத்தியசீலன்)
தும்பளை
மலர்வு : 28-05-61
உதிர்வு : 20-04-86

www.tamilarangam.net



1ம் பக்கத் தொடர்ச்சி

''இலங்கை அரசாங்கம் உண்மையான நோக்கத்தோடு மாகாணசபை யோசனைகளை முன்வைக்கவில்லை. தீவிரவாதிகளின் போராட்டம், உலக நாடுகளின் வற்புறுத்தல், இந்தியா தமிழர்கள்மீது காட்டும் அக்கறை, இது வெல்லக்கூடிய யுத்தமல்ல என்று முப்படைத் தலைவர்களும் கூறிவரும் கருத்துக்கள் இவைகள் தான் அரசாங்கத்தை இன்று மாகாணசபை யோசனைகளை முன்வைக்கச் செய்துள்ளன. மாகாணசபை யோசனைகளை அரசு முன்வைத்தபோதிலும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தமிழர்களின் தாயக உரிமை என்பவற்றை ஏற்க இந்த அரசு தயாராக இல்லை. இந்நிலையில் இந்த அரசின் சமரச முயற்சியால் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.''

''தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எமது நிலையை எடுத்துரைப்பதற்காகவே நாம் அரசியல் கட்சி மாநாட்டில் கலந்துகொண்டோம். அதனால் அரசின் பக்கம் நாம் சார்ந்துவிடவில்லை. அரசுக்கு எதிரான எமது போராட்டம் தொடரும்'' என்று கூறினார்.

''தமிழ் பேசும் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு, பூரண உரிமையுடையவர்கள் என்பதை நவ சமசமாஜக் கட்சி ஏற்றுக்கொள்கிறது. தமிழர்கள் அனைவரும் விரும்பி அப்போராட்டத்தில் ஈடுபட்டால் எமது கட்சியும் அப்போராட்டத்திற்கு ஆதரவளிக்கும்'' என்று நவ லங்கா சமசமாஜக் கட்சியின்இரு பொலிட்பீரோ உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்கள். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமையை நேரில் அறிந்து செல்வதற்காக யாழ் வந்துள்ள நீல் விஜயதிலக்க, சிறில்துங்க ஜயசூரிய ஆகிய இவ்விரு நவ லங்கா சமசமாஜக்கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர்களும் யாழ் நகரில் பத்திரிகையாளர்களின் மாநாடு ஒன்றையும் நடத்தினார்கள். 1977-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் தனி ஈழக் கோரிக்கையை ஏற்றுள்ளார்கள்தானே? எனக் கேட்கப்பட்டபோது அதன் மூலமாக மட்டும் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள் எனக் கூறமுடியாதெனத் திரு. நீல் விஜயதிலக விளக்கினார். உத்தேச மாகாணசபைபற்றியும், அரசுக்கும், கூட்டணிக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகள் பற்றியும் திரு.விஜயதிலக்க கருத்துத் தெரிவிக்கையில், ''இப் பேச்சுக்களின் மூலம் !தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படுமென எமது கட்சி நம்பவில்லை. இதன் பின்னணியில் பெரியதொரு சூழ்ச்சியே உள்ளது. தமிழ்ப் போராளிகளை நிராயுதபாணிகளாக்குவதற்கே ஜனாதிபதி இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளார்'' என்று கூறினார்.

''மாகாணசபை மூலம் பிரச்சினை தீராது இதனால் தான் தமிழ்ப்போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடக்கூடாது என எமது கட்சி வலியுறுத்துகிறது. தமிழர்களின் பாதுகாப்புப் பற்றியோ, அவர்களின் பாரம்பரிய பிரதேசம் பற்றியோ இதில் எவ்வித உள்ளடக்கமும் இல்லை. அதிகாரப் பரவலாக்கல் மட்டுமே இதில் உள்ளது. நினைத்த நேரத்தில் இதனை நீக்கும் உரிமையும் ஜனாதிபதிக்கு உண்டு. கூட்டணியினரும் இந்நிலையை மாற்ற எண்ணியே இப்பொழுது பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறார்கள். ஆனால் பிரேரணைகளில் சலுகைகளை விட்டுக்கொடுக்க ஜனாதிபதியால் முடியாது''.

''மாகாணசபைகளால் தமிழ் மக்களுக்கு அற்ப சலுகைகளாவது வழங்கப்படுமென்றால் இதனை எதிர்க்கும் சிங்கள இனவாதக் கட்சிகளை முறியடிக்க நாம் தயாராகவுள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் இடதுசாரிகள் சிங்கள இனவாதிகளுக்கெதிராகக் கடுமையாகச் செயற்பட வேண்டியுள்ளது'' என்றார்.

## "உறுமல்"

### சந்தா விபரம்

தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தில் நடைபெற்று வரும் செய்திகளையும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்ட நடவடிக்கைகள் பற்றிய செய்திகளையும் தாங்கி மாதமிருமுறை வெளிவருகிறது **உறுமல்**. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தி வெளியீட்டுப் பிரிவினால் வெளியிடப்படும் செய்தித் தொடர்புப் பாலமான உறுமல் இதழுக்குச் சந்தாதாரராவதன் மூலம் தமிழீழத்தின் இன்றைய உண்மை நிலைபற்றி உடனுக்குடன் தெரிந்து கொள்ளுங்கள்.

**ஆண்டுச் சந்தா : ரூ. 20-00**
**ஆறுமாதச் சந்தா : ரூ. 10-00**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
Post Box No. 928
அடையாறு, சென்னை-20.

**BOOK POST**
**PRINTED MATTER**

**"உறுமல்"**
**த. பெ. எண்: 928**
**அடையாறு**
**சென்னை 20**

**LTTE (UK Branch)**
**42 ALBANY STREET**
**LONDON NW1 4EA**
**01 387 4739**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்